ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

भेषजं भवरोगिणामखिलापदामपहारिणं
दक्षयज्ञविनाशनं त्रिगुणात्मकं त्रिविलोचनम् ।
भुक्तिमुक्तिफलप्रदं सकलाघसंघनिबर्हणं
चन्द्रशेखरमाश्रये मम किं करिष्यति वै यमः ॥ चन्द्रशेखराष्टके ।

ஸம்ஸாரமெனப்பெயர்வாய்ந்த ரோகத்தைப் பெற்றவர்களுக்குச் சிறந்த ஔடதமாயும், எவ்வித ஆபத்துக்களையும் போக்கும் சக்தியுடையவரும், தம்மை அவமானம்செய்த தக்ஷப்பிரஜாபதியினுடைய வேள்வியை நாசம் செய்தவராயும், ஸத்வம், ரஜஸ். தமஸ், என்கிற மூன்று குணஸ்வரூபராயும், திங்கள், ரவி, அக்னி என்கிற இம்மூவர்களையும் மூன்று நேத்திரமாகவுடையவரும், இவ்வுலகிலுள்ள சுகத்தையோ பரலோகத்திலுள்ள சுகத்தையோ எதை யார் பெறவேண்டுமென்று இச்சித்தாலும் அதையளிப்பவரும், எவ்வித பாபக் கூட்டங்களையும் விலக்குகிறவராயும் விளங்கும் சந்திரனை சிரோபூஷணமாயுடைய ஸ்ரீ கைலாஸாதிபதியை நான் சரணமாகஅடைகின்றேன். யமனால் என்னைஎன்னசெய்யமுடியும்?

உலகில் ஜன்மாவையடைந்த பிராணிகளுக்குள் ஸம்ஸாரமென்கிற இப்பெரிய ரோகமின்றிஒருபிராணியும இருக்கமாட்டா. இதற்கு முன்ஜன்மாக்களில் செய்யப்பட்ட கர்மாக்களால் இப்பிறவி எற்பட்டதுபோல் இந்த ஸமயம் செய்யப்படும் பல கர்மாக்களாலும் இனியும் ஜன்மா உண்டு. ஆனால் அது எவ்விதமான ஜன்மாவென்று இப்பொழுது நம்மால் கூறவியலாது. தற்காலம் நம் போன்றவர்களால் செய்யப்படும் கர்மாக்களைக் கவனித்தால் இனி இம்மானிடப்பிறவி கிடைப்பது கூட அரிதிலுமரிதெனத் தோன்றுகிறது. இவ்விதம் அனாதிகாலம் தொடங்கி எற்பட்டிருக்கும் பவம் என்னும் பெரும்பிணியைப் போக்குவதில் சிறந்த ஔடதமாயும் பின்னும் நம்மால் முன் செய்யப்பட்ட ஸகல பாபங்களை நிவர்த்திசெய்கின்றவராயும் இனியும் நமக்கு யாதொரு கஷ்டமும் வராமல் பாதுகாக்கும் சக்திபெற்றவருமான ஸ்ரீ சந்திரசேகரரை ஆராதித்து அவருடைய அனுக்கிரஹத்தால் யமனென்கிற கொடிய சத்துருவை ஜயித்து சுகித்திருக்கலாம் என்று ஒரு மஹான் உபதேசிக்கின்றார். சுபம்,

உபபத்திராதிபர்,

# 11-ஆவது ஆண்டு பூர்த்தி.

श्रीमल्लोकगुरुप्रसादबलतश्शास्त्रोक्तधर्मान्क्रमा-
दाविष्कृत्य समान्समस्तसुखदान्विद्वन्मनः कौतुकम् ।
कुर्वन्सञ्चरणं दिशासु निखिलास्वप्यार्यधर्मःस्वयं
पूर्तिं प्रापदुमामहेशकृपयाचैकादशाब्दस्य हि ॥

நம் ஆர்யதர்ம்ம பத்திரிகையானது கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்களுடைய அனுக்கிரகத்தால் ஸகல திக்குகளிலும் யாதொரு இடையூறுமின்றி ஸஞ்சாரம்செய்து ஆங்காங்கு சாஸ்திரங்களில் கூறப்பட்ட எவ்வித சுகத்தையுமளிக்கும் சக்தியுடன்கூடிய ஸமஸ்ததர்ம்மங்களையும்நன்கு போதித்து அனுஷ்டிக்கும்படி செய்து பண்டிதர்களின் மனத்திற்கு அதிக சந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறதாய்க்கொண்டு ஸ்ரீ பார்வதீதேவியின் பதியான பரமேசுவரனுடைய கருணையால் இத்துடன் பதினோருவதாண்டின் பூர்த்தியைப்பெற்றது.

உபபத்திராதிபர்.

---

## மனிதர்களுக்கு வேண்டியது மூன்றுவித விருப்பங்கள்.

விசேஷமான பௌருஷத்தையும் பராக்கிரமத்தையும் புத்திசக்தியையும் பெற்று இவ்வுலகிலும் பரலோகத்திலும் சுகத்தை அடையவேண்டுமென்கிற இச்சைகொண்ட புருஷனால் விரும்பத் தகுந்தவை— 1, பிராணேஷணா (அதாவது தன் ஜீவனை) க்காப்

பாற்றுவதில் ஆசை. 2. வித்தேஷணை (பொருளைத்தேடவேண்டுமென்கிற அவா. 3. பரலோகஷேணை ( பரலோகத்திலும் நாம் சுகமாயிருக்கவேண்டுமென்கிற விருப்பம்)இம்மூன்றுகளேயாகும். இம்மூன்றுவித விருப்பங்களுக்குள் பிராணனை நன்கு ரக்ஷிக்க வேண்டுமென்பது முந்தி கவனிக்கவேண்டியதாகும். ஏனென்றால் அஃதில்லாவிடில் வேறு ஒருகார்யமும் செய்யவியலாதென்பதே காரணமாகும். எவ்விதக் கர்மாவைச் செய்யவேண்டியிருந்தாலும் சரீரமில்லாமல் நடைபெறாதென்பது யாவருக்கும் அனுபவஸித்தமே. இக்கருத்தையே ஆன்றோரும் शरीरमाद्यं खलु धर्मसाधनं என்று செப்பியிருக்கிறார். ரோகமில்லாமலிருப்பவர்கள் தம் சரீரத்திற்கு ரோகம் வராமல் ஜாக்கிரதையாக ஆகாரம் வியவகாரம் நித்திரை இவைகளை ஸரியானகாலத்தில் உசிதமாகச் செய்யவேண்டும். சரீரத்தில் ரோகாதிகளால் சிரமமிருந்தால் அதைப்போக்கடிக்கவேண்டியதற்குத் தகுந்த பரிஹாரம் செய்து பிராணனை ரக்ஷிக்கவேண்டும். இவ்விதம் இதைச் சரியாய் ரக்ஷித்தால்தான் தீர்க்காயுளும் பெற்று மற்றும் தம் சுகத்திற்கு வேண்டிய கார்யங்களும் செய்யமுடியும்.

இரண்டாவது வித்தேஷணையாகும். ஆயுளைப் பாதுகாத்த பிறகு தனத்தைப்பெற முயலவேண்டும். இவ்வுலகவாழ்க்கையில் இருக்கும் வரையில் பொருளின்றி ஒரு கார்யமும் நடைபெறாது. பரலோகத்தில் அடையவேண்டிய சுகத்திற்குச் சாதனமான சில கார்யங்களை அனுஷ்டிப்பதற்கும் பொருளபேக்ஷையுண்டு. ஆகையால் பரலோகேஷணையைக் காட்டிலும் முந்தி வித்தேஷணையிருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. இதனால் பொருளைச் சம்பாதனம் செய்யவேண்டியதும் அவசியமென்று ஏற்பட்டது. நிலங்களில் பயிர்களை ஸாகுபடிசெய்வதாலும் வியாபாரத்தொழில் செய்தும் பசுக்களை ரக்ஷித்தும் அரசர்களிடம் ஸேவையாலும் மற்றும் பெரியோர்களாலும் சாஸ்திரங்களாலும் நிந்திக்கப்படாத கர்மாக்கள் எவையிருக்கின்றனவோ அக்கர்மாக்களைச் செய்தாகிலும் பொருளை ஆர்ஜனம் செய்யலாம்.

नह्यतः पापात् पापीयो हि यदनुपकरणस्य दीर्घमायुः ।
तस्मादुपकरणानि प्रयेष्टुं यतेत ।

தன் ஜீவனத்திற்குப் போதுமான பொருளில்லாமல் தீர்க்காயுளை யடைந்திருக்கும் பாபியைக்காட்டிலும் வேறு சிறந்த பாபி ஒருவருமில்லை. ஆகையால் ஜீவனத்திற்கு வேண்டிய பொருளைத் தேட முயற்சிக்கவேண்டியது என்று சரகாசார்யரும் கூறுகிறார்

3, பரலோகஷணை ஆஸ்திகர்களாயும் வேதசாஸ்திரப் பிரமாணங்களை நம்புகிறவர்களாயுமிருப்பவர்களுக்குப் பரலோகமுண்டென்று அவச்யம் அங்கீகரிக்கத்தான்வேண்டும். அவ்விதம் அங்கீகரிக்கிறவர்களுக்கு அந்த லோகத்தில் கஷ்டத்தையடையாமலிருக்க வேண்டியதற்குற்ற ஸாதனங்களை தம்ஜீவதசையிலேயே தேட வேண்டியது முக்கியம். ஆகையால் அந்த விருப்பமும் அவசியமிருக்கவேண்டும். இவ்விதமிருந்தால் எங்கும் சுகமாயிருக்கலாம்.

உபபத்திராதிபர்.

---

# ஆர்யதர்மாபிவர்த்தனி ஸபா.

## கீழையூர் திருக்கோவிலூர்.

(593-வது பக்கத்தொடர்ச்சி)

ஆண்டவன் ஒருவன் உண்டென்று உணர்வேயின்றி, கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்ற கொள்கையுடையாராய் தேகேந்திரிய மனங்களின் சேர்க்கையே தாமென்று மயங்கி ஸ்வயநலமே ஸ்வர்க்கமென உழன்று காலங்கழித்தவர்க்கென ஏற்பட்டுள்ளது மூன்றாவது மார்க்கம். இது நரகத்திற்குச் செல்வது. தேகவியோகமாகிப்புறப்படுங்கால் முதல் இரண்டாவது மார்க்கங்களுக்குரியவர் 4-வது படிவரை ஒரேவழியாகச் சென்று பிறகு பிரியும் மார்க்கத்தால் முறையே பிரம்மலோகம் ஸ்வர்க்கம், சேருகின்றனர்.

மூன்றாவதுவழியால் கொண்டுபோகப்படுகிறவர்கள் பிரயாணஆரம்பமுதல் பேரய்ச்சேரும் வரை பற்பல துன்பங்களுக்குள்ளா

கின்றனர். நரகம் சென்று நரகயாதனைகளையனுபவித்தபின்னர் இங்கு திரும்பிவந்து அற்பாயுளுள்ள பிராணிகளாய் ஓயாமல் பிறந்திறந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்வுலகவாழ்க்கையில் விவேக வைராக்ய ஸம்பன்னராய்த் தன்னலம மறந்து அன்பின் பெருக்கினால் ஆண்டவனைத் தன்னுள்ளும் புறமும் எங்கும் கண்டுணர்ந்து ஆத்மஞானிகளாகிப் பிறவிப் பிணிகடந்த முக்தர்களுக்குத் தவிர மற்ற மேற்கண்டமூன்று மார்க்கங்களாற் செல்பவருக்கும் அவர்கள் ஸந்ததியாரால் இவ்வுலகில் ஸபண்டீகரண சிராத்தம் செய்யப்படவேண்டும். இந்த சிராத்தம் பிரயாணிகளுக்காக வழியில் சுங்கம் செலுத்தப்படுவதுபோலாகும். இது நடைபெறாவிடில் மேற்கண்ட மார்க்கங்களிற் செல்பவரின் கதி தடைபட்டு நிற்கிறது. இவர்களில் எவர்க்கேனும் மேற்கண்ட சிரார்த்தத்தைச் செய்ய வார்சுதாரே ஒருவருமில்லையேல், அவரவர்க்குள்ள புண்யத்தால் ஒரு பாகம் இதற்காக ஈடுசெய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் இவர்கள் விடப்படுகின்றனர்.

சூரியனுடைய கிரணங்களே மேலே கூறப்பட்ட மூன்று மார்க்கங்களாக ஏற்படுகின்றன. மேலுலகங்களில் கர்மானுகுணமாக இன்பதுன்பங்களையனுபவித்த பின்னர் ஜீவர்கள் மேகத்திற் கலந்து மழைதாரைகளின் மூலமாய் இவ்வுலகத்திற்கு வந்து விளைபொருட்களிற்றங்கி பிராணிகளின் தேகத்தில் உணவாகச் சென்று, வினைவாசனைகளுக்கேற்ற சரீரங்களைப் பெறுகின்றனர்.

இம்மூன்று தினங்களாய்க் கைம்மாறு கருதாது கருணாம்ருதமாய் அரியபெரிய உபதேசங்களை இச்சபையார் வேண்டுகோளுக்கிணங்கி சொற்பொழிவுகள் மூலமாய்த்திருவாய்மலர்ந்தருளிய இப்பெரியார் அவ்யாஜகருணாமூர்த்தியான நம் ஸ்ரீஜகதாசார்யாளுடைய ப்ரஸாதப்ரவாஹத்தை இப்பிரதேசத்தின்பால், திருப்பிவிட்டு நம்மை இன்பவாரிதியிலாழ்ந்திருக்கச் செய்தனர். இப் பெரியாரைச் சென்ற இரண்டுதடவைகளில் தர்சித்து சிரவணிக்க நேர்ந்

தது இப்பிரதேசத்தின் தவப்பயனேயாகுமென இவரைக்கேட்ட ஒவ்வொருவராலும் கருதப்படுகிறது.

வைதிகக்கல்விக்கு வற்ருஊற்ருய் இலங்கும் இப்பெரியாரின் கல்விக்கேற்ற ஒழுக்கமும், இவர் மனமொழி மெய்களால் ததும் பிக்காணும் பேரன்பும் இவரைக்கண்டு கேட்டவர் ஒவ்வொருவருக்கும் பேரின்பத்தையே விளைவித்ததெனக் கூறுவது சற்றும் மிகையாகாது. அன்பிற்சிறந்த இப்பெரியார்க்கு அன்புருவான ஆண்டவன் அருள்மாரி அனவரதம்பொழிந்துகொண்டிருக்கவேண்டுமென இச்சபையார் ஒருமைப்பட்ட மனதுடன் பிரார்த்திக்கின்றனர்.

இப்பெரியார் இங்கு மேற்கண்ட மூன்றுநாட்கள் தங்கி 16–12–26 புதவாரம் காலே வண்டிக்குச் சிதம்பரத்திற்கு அங்கு நிகழும் அத்வைத ஸபையில் சொற்பொழிவு நிகழ்த்தும்பொருட்டுச்சென்ருர்.

K. R. சுப்பிரமணியசாஸ்திரி,

காரியதரிசி.

---

# சிதம்பரம் அத்வைத ஸபை.

ஸ்ரீமதானந்த நடராஜமூர்த்தியின் ஆருத்திராதர்சன மஹோத்ஸவத்திற்கு, சென்ற வருஷம்போல் இவ்வருஷமும் வேதபாராயணத்திற்குச் சென்றிருந்த யான், வேதாந்த வித்தையின் விலாஸம் விளங்கும் அத்வைத ஸபைக்கும் அடிக்கடி சென்று ஆனந்தமடைந்து வந்தேன்.

உத்ஸவாரம்பதினத்தில் ஸபையின் ஆரம்பம் செய்யப்பட்டுப் பிரதிதினம் காலே வேலேகளில் "ஈசம்" முதலான பத்து உபநிஷதுகளும் முறையே மூல பாராயணம் செய்யப்பட்டு வந்தது

ஸபையை அலங்கரித்த பண்டிதர்களுக்கு வஸதியும் போஜனுதி ஸௌகர்யங்களும் செவ்வனே நடத்தப்பட்டன. 11—12—26 மாலை $3\frac{1}{2}$ மணிக்குமேல் போலகம் பிரம்மஸ்ரீ ராமாசாஸ்திரிகளால் ஈச. கேன, உபநிஷத்துகளின் தாத்பர்யம் ஆசார்யாள் பாஷ்யானு ஸாரமாகத்தமிழில் உபந்யஸிக்கப்பட்டது. மறுநாள் பிர்ம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளால் கடோபநிஷத்தும், மூன்றும் நாள் அம்மங்குடி பிர்ம்மஸ்ரீ பரமேச்வா சாஸ்திரிகளால் பிரச்ன முண்டக உபநிஷத்துக்களும், நாலாம்நாள் சேங்காலிபுரம்ஸ்ரீமான் வைத்தினுதசாஸ்திரிகளால் கௌடபாத காரிகையுடன்மாண்டூக்ய உபநிஷத்தும் உபந்யஸிக்கப்பட்டன. ஐந்தாவதுநாள் முதலாக காலை மாலை இரண்டு வேளைகளிலும் உபந்யாஸங்கள் நடைபெற்றன. இன்றுகாலை மணக்கால் பிர்ம்மஸ்ரீராகவசாஸ்திரகளால்தைத்திரீயோப நிஷத்மூன்றுவல்லிகளையும்சிறுவரும் அறியுமாறு உரைக்கப்பட்டது.

மாலை ஐதரேயோப நிஷத்து ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் வரகூர் பிர்ம்மஸ்ரீ வெங்கிடராம சாஸ்திரிகள் உபந்யஸிப்பார்கள் என்று முன்னுடியே நிகழ்சசி முறையில் கண்டிருந்தும் அந்த நிமிஷம் வரையில் எதிர்பார்த்தும் அவர்கள் அச்சமயம்வா அஸௌகர்யபட்டபடியால் ஷை ஐதரேயோபநிஷத்தை மஹாமஹோபாத்தியாயர் பிர்மஸ்ரீ சிவ. தண்டபாணிஸ்வாமிதீக்ஷிதரவர்கள்உபந்யஸித்தனர். திடீரென்று ஆலோசனையன்னியில் உபந்யாஸம் செய்வது ஸ்ரீமான் தீக்ஷிதர்போன்றவர்களுக்கு அதிகப் பெருமையை உண்டாக்காமற்போனுலும் என்னைப் போன்றவர்களுக்கு விசேஷ வியப்பை உண்டுபண்ணுமலிராது.

சாந்தோக்யம் ஒன்று முதல் நான்காவது அத்தியாயம்முடிய மறுநாள் காலையில் போலகம் பிர்மஸ்ரீசுந்தரசாஸ்திரிகளாலும்மாலை ஐந்து ஆறு அத்தியாயங்கள் மதுரை ராமேச்வரம் தேவஸ்தானம் காலேஜ் பிரின்ஸ்பால் ஸ்ரீமான் ராமஸுப்பா சாஸ்திரிகளாலும் ஏழு எட்டு அத்தியாயங்கள் திருவையாறு காலேஜ் வியாகரண பண்டிதர், மரூர். வைத்தினுதசாஸ்திரிகளாலும் பிருஹதாரண்யம் முதல் இரண்டு அத்தியாயங்கள் திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வேதாந்த பாடசாலை உபாத்தியாயர் பிர்மஸ்ரீ விசுவனுத சாஸ்திரிகளாலும் உபந்யாஸம் செய்யப்பட்டன.

இங்கும் குறிப்பிட வேண்டிய அவச்யமொன் றுண்டு. பிருஹதாரண்யகம் இரண்டாவது அத்தியாயத்துள்ள! சிசுப்பிராம்மணம் மதுப்பிராம்மணம் முதலான பாகங்கள் "பாஷ்யபாவக்ஞ" பிர்ம்மஸ்ரீ வெங்கடராமசாஸ்திரிகளுக்கு யாதிருச்சிகமாய்ப் பிரஸங்கம் செய்ய வாய்த்தபடியால் மதுப்பிராசனத்தால், சிசுக்கள் அடைந்த சந்தோஷத்தைக் காட்டிலும் அதிகமே ஸபையோர்கள் அடைந்தனர் என்பது திண்ணமே? மைலாப்பூர் பிர்மஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகளால் மூன்றும் அத்தியாபமும். நாலு ஐந்து ஆறு அத்தியாயங்கள் கருங்குளம் பிர்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளாலும் பிரஸிங்கித்து இனிதுஉபஸம்ஹாரம் செய்யப்பட்டது. ஏதோத்ஸவதினத்தில் காலையில் உத்தரசாந்தியும் மாலை மூன்றுமணி முதல் எல்லா வேதங்கள் சாஸ்திரவாக்யார்த்தங்கள் இவைகளில் பிரசம்ஸையும் நடந்தது. இன்றையதினம் சென்னை, ராஜதானி கலாசாலை ஸம்ஸ்கிருத ப்ரொவஸர் பிர்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் எம்.ஏ. அக்ராஸனம் வகித்தார்கள். கார்யதர்சியால் சபையின் விருத்தாந்தமும் ஜகத்குரு பரமாசாரியர்களுடைய அனுக்ரஹரூபமான உபகாரங்களையும் மற்றவர்களுடைய பேருதவிகளையும் சபையோர்களுக்குத் தெரிவித்து ஸம்பாவனைகளை நடராஜமூர்த்தி முதலாக தலைவர் கையினாலேயே செய்துவித்தனர். பிறகு சபைத்தலைவர் எல்லா உபநிஷத்துகளுக்கும் பரம தாத்பர்யம் அத்வைதத்தில் தான் என்பதை விளங்கும்படி ஓர் அருமையான வியாக்கியானம் ஸபையில் புரிந்து களிக்கச்செய்து மாலை ஆறுமணியுடன் சந்தனம் தாம்பூலம் புஷ்பம் முதலியவைகள் வழங்கி ஸபை இனிது நிகழ்ச்சிபெற்றது.

எல்லா வித்தைகளுக்கும் இருப்பிடமான இந்த க்ஷேத்திரத்திற்கு ஷடி அத்வைதஸபா அவச்யத்திலும் அவச்யமாகும். இறைவன் கருணைபுரிக. சுபம்.

வி. உமாமகேச்வர சாஸ்திரீ,

காட்டு மன்னார்கோவில்.

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

# ஸ்ரீராதாகல்யாண மஹோத்ஸவ பத்திரிகை,

கலெளயுகே கல்மஷமானஸாநாம் ராமேநிவர்ணத்வபமந்தரேண
அந்யோநதர்ம: கலு நிச்சயேநபும்ஸாம்பவேத்ஸம்ஸ்ருதிதாபபாஜாம்

இப்பாரதகண்டத்திற்குத்திலகம்போல் விளங்கிவருகிற நாகப்பட்டணத்திற்குச்சமீபத்திலுள்ள புந்நாகவனம் என்னும் திவ்விய க்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதி மேல அக்கிரகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கின்ற, ஸாக்ஷாத் ஸ்ரீவைகுண்ட வாஸியாய் வனமாலியாய், ஸ்ரிய: பதியாயும் இம்மையில் தர்மார்த்த காமியங்களையும், மறுமையில் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும், கொடுக்கப்பட்டவாராயுமான ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கோலோகத்திலிருந்தும் துஷ்டத்வம்ஸ சிஷ்ட ஸம்ரக்ஷணார்த்தம் அவதரித்து, தன்னுடைய பரமப்ரேயஸியாயும், சாபத்தினால்பூலோக கோகுலத்தில் அவதரித்தவளுமான, ஸ்ரீ ராதாதேவியினுடைய விவாகத்தைப் பிருந்தாவனத்தில் காந்தர்வ விதியினால் நடத்தின திவ்விய ராதாகல்யாண மஹோத்ஸவத்தை பகவத் கிருபையை முன்னிட்டு அக்ஷய நாம ஸம்வத்ஸரம் தனுர்-ஸ்ரீ 15வ முதல் 17வ வரையில் நன்கு நடைபெற்ற காலத்தில் ஷெ உத்ஸவத்திற்கு பக்தகோடிகள் யாவரும் தங்களிஷ்ட மித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து ஜென்ம ஸாபல்யத்தை அடைந்து, பகவத் க்ருபைக்குப் பாத்திரராக ஆனார்கள்.

## உத்ஸவ விபரம்.

---

அக்ஷய௵
மார்கழிஸ்ரீ 15வ (30-12-26) வியாழக்கிழமைமாலை 6 மணிக்கு விக்னேச்வர பூஜையும், பகவத்பஜனமும்கீர்த்தன குணானுபவங்களும் 7 மணி முதல்11 மணி வரையில் ஹரிகதை.

ஷெ 16வ (31-12-26) வெள்ளிக்கிழமை காலை 6மணிக்கு திவ்ய நாமஸங்கீர்த்தனம், 7 மணி முதல் 11 மணி வரையில் ஸ்ரீகோபாலகிருஷ்ணபரமாத்மாவுக்கும் ஸ்ரீ ராதாதேவிக்கும் திருக்கல்யாண கதாப்ரசங்கம், கல்யாண வைபவம் மாலை 8 மணிக்குமேல் மாங்குடி பிரம்மஸ்ரீ சிதம்பரபாகவதர் அவர்களால் நடத்தப்பட்ட கதை.

மார்கழிமீ ௧௭ௗ 1-1-27) சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஆஞ்ஜநேயஸ்வாமி உத்ஸவம்.

மாலை 6 மணிக்கு விடாயாத்தி உத்ஸவம்,

இப்படிக்கு பாகவத ஸமுதாய தாஸன்,

ராம, து. வீராசாமி அய்யன்.

---

# பிருதுராஜசரித்திரம்.

(586 ஆது பக்கத்தொடர்ச்சி)

## அத்திரியின் மேன்மை.

மஹாராஜரே, அத்திரிபகவானின் மேன்மையைக் கேட்க வேண்டும், தங்கள் சபையில் அவர், சித்தாந்தப்படுத்தினது யாவரும் அறிந்த விஷயமே. இதற்கு முன் அத்திரிமுனிவர் அனுசூயா என்ற பதிவிரதாசிரோமணியோடு, இல்லறத்திலிருந்து காலங்கழிக்கையில்புத்திரப்பேறில்லாமல் கவலையுற்று, அக்கவலையைத் தீர்க்க த்ரிமூர்த்திகளைக்குறித்துத்தவஞ்செய்யலானார். அப்போது அவரது சிரசில் நின்றும் வெளிப்பட்டு ஜ்வலிக்கின்ற அக்நியாலே, தபித்துக்கொண்டிருக்கிற மூன்று உலகத்தையும், பிர்மா, விஷ்ணு ருத்திரர்களான பிரபுக்கள் பார்த்து, அந்த அத்திரியினுடைய ஆசிரமத்தையடைந்தார்கள். அப்போது அத்திரியானவர் அம்மூர்த்திகளையும் கண்டு, பேரானந்தமடைந்து, ஆனந்தபாஷ்பம்பெருக, ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அஞ்சலிபந்தத்துடன், மதுரமான வாக்காலே அவர்களை ஸ்தோத்திரஞ்செய்தார். உடனே அம்மூர்த்திகளும், எங்களுடைய அம்சபூதர்களாய், லோகப்பிரசித்தர்களான மூன்று பிள்ளைகள் பிறக்கப்போகிறார்கள் என்று அநுக்கிரகித்து மறைந்தார்கள். அப்பால் அநுசூயையிடம், பிரும்மாவின் அம்சமாகச் சந்திரனும், விஷ்ணுவினுடைய அம்சமாக யோகியான தத்தாத்ரேயரும், சங்கரனுடைய அம்சமாக தூர்வாசரும் உண்டானார்கள். இவ்விதம் தபோபலத்தால் மும்மூர்த்திகளையும் புதல்வராய்ப்பெற்ற அத்ரியின் பெருமை யாருக்குத்தான் உண்டு இவர் சிருஷ்டியின் துவக்கத்தில் பிர்மாவின் நேத்திரத்திலிருந்து

ஜனித்தவர். இந்த மகானையே, கர்த்தமப் பிரஜாபதியின் புதல்வியான அனசூயை மணம்புரிந்து பதிவிரதாசிரோமணியென மூவுலகிலும் பிரசித்திபெற்றாள்.

## அனசூயையின் பாதிவ்ரத்யம்.

தென்திசையில் 'காமமதம் என்ற வனம் ஒன்றுண்டு. அங்கே பிரும்மபுத்திரராகிய அத்திரிமகரிஷி தமது பத்தினியாகிய அனசூயையுடன் தவஞ்செய்துகொண்டிருந்தார். அப்பொழுது நூறு வருஷகாலமாய் மழையில்லாமையால் எல்லா ஜீவன்களும் மிகவும் கஷ்டப்பட்டார்கள். எங்கும் தண்ணீர் கிடையாது. மரங்கள், செடிகள் எல்லாம்உலர்ந்துபோயின. ஜலமில்லாததால், சந்தியாவந்தனம் முதலிய நித்தியகர்மானுஷ்டானங்கள் செய்யப்படாது ஒழிந்தன. அப்பொழுது பஞ்சத்தின் கொடுமையால் அத்திரி மஹரிஷியின் சிஷர்களும், பலபல விடங்களுக்குச் சென்றுவிட்டனர். அனசூயை, தானே தன் கணவனுக்குச் செய்யவேண்டிய எல்லாப் பணிவிடைகளையும் குறைவின்றிச்செய்து வந்தாள், பார்த்திவலிங்கமொன்று செய்து தன்கணவன் முன்வைத்து அதைப் பூஜிக்கத்தக்க உபகரணங்கள் இல்லாமையால் மானஸிகமாய்ப் பூஜித்து வந்தாள் அப்பொழுது அவளது சௌந்தரியத்தைக் கண்டு மோகித்து, அவளை அணுக உத்தேசித்த தைத்தியர்,தானவர் முதலானவர்கள் அவளுடைய பாதிவிரத்யாக்னியாலும், பக்தியின் மஹிமையினாலும், அவளை நெருங்கமுடியாமல் போய்விட்டார்கள். இவ்வாறு அத்திரிமஹரிஷியோ யோகத்திலகப்பட்டு வெகுகாலம் உலகத்தில் நடக்கும் யாதொரு சங்கதியும் அறியாதிருந்தார். இவ்விருவர்களுடைய அரிய தவத்தையும் பூஜையையும்கண்டு; தேவர்கள் எல்லோரும் மிக்கவியந்து, ஆச்சரியமுற்றனர். இவ்வாறு ஐம்பத்துநான்கு வருடங்கள் சென்றன ஒரு காலத்தில் அத்ரிமஹா முனிவர் தமது நிஷ்டைகலைந்து, அனசூயையை நோக்கி "விரைவில் ஜலங்கொண்டு வருக" என்று உரைத்தார். அனுசூயையும் கமண்டலத்தை யெடுத்துக்கொண்டு ஜலத்துக்காகப் பல இடங்களில் தேடியும் அது அகப்படவில்லை. அப்பொழுது கங்காதேவி பிரசன்னமாகி "உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் கொடுக்கிறேன்" என்றாள் அனசூயை "தாயே எனக்கு ஜலம் வேண்டும்" என்று சொல்லி, கங்காதேவி சொன்ன

பிரகாரம் தன் கையால் பூமியில் குழிதோண்ட ஜலம் தாராதாரையாய் உண்டாயிற்று. அப்பொழுது அவள் மிகவும் சந்தோஷம் பட்டு, கங்காதேவியைப்பார்த்து, 'என் கணவரது தவம் முடியும் வரை நீர் இங்கேயே இருக்கவேண்டும்' என்று வேண்ட, கங்கா தேவி அனசூயையைப்பார்த்து, "உன் கணவனுக்குத்தொண்டு செய்து வந்திருப்பதில் ஒருமாஸபலனை எனக்குக்கொடு" என்று கேட்க அனசூயையும் அவ்வாறு ஒப்புக்கொண்டாள் அதன்பேரில் கங்காதேவியும் அங்கேயே இருப்பதற்குச் சம்மதித்தாள். அனசூயை கொண்டுவந்த ஜலத்தை, அத்ரிமஹாமுனிவர் ஆசமனஞ்செய்து, ஜலத்தின் அபரிமிதமான ருசியைக்கண்டு, அனசூயையைப்பார்த்து, "ஓ பெண்ணே நீ வழக்கமாய்க் கொடுக்கும் ஜலம்போல இல்லையே என்ன சங்கதி" என்று கேட்க, நான்கு பக்கங்களிலும் சுற்றிப்பார்த்து, எங்குபார்த்தாலும் ஜலமில்லாமல் வரண்டிருப்பதைக்கண்டு, 'இவ்வாட்சியான காலத்தில் சிறந்த இந்த ஜலம்எவ்வாறு கிடைத்தது என்றுவினவினர். அனசூயை நிகழ்ந்தவற்றையெல்லாம் அவருக்கு எடுத்துரைத்தாள். அத்ரி முனிவர் ஆச்சரியப்பட்டு, கங்காதேவியைத் தாம் பார்க்கவேண்டுமென தெரிவித்தார். உடனே அவ்விருவரும் கங்காதேவியைத் தெரிசித்தார்கள். பிறகு அனசூயா தேவி, உலகத்திலுள்ளசகல ஜீவன்களின் க்ஷேமத்தின் பொருட்டு கங்காதேவியை அங்கேயே நிலையாயிருக்கும்படி வேண்டினாள். அதற்கு கங்காதேவி, அனசூயையைப்பார்த்து, "நீ உன் கணவனுக்கு பக்தியுடன் செய்து வந்திருக்கிற பதிவிரதா தர்மம் நிறைந்த பணிவிடைகளின் பலனின் ஒரு வருஷத்திய பலனை எனக்குக் கொடுப்பாயானால் நான் அவ்வாறுசெய்கிறேன்" என்றாள். மஹாபதிவிரதையும் ஜீவன்களிடத்து மிக்கதயவுள்ளவளுமான அனசூயை அதற்குச் சம்மதித்தாள். அதனால் அவ்விடமெல்லாம்நீர்வளம்பெற்றுச்சிறப்புடன்விளங்கிற்று. அனசூயா தேவியால் ஸ்தாபிக்கப்பட்ட பார்த்திவ லிங்கத்தினின்றும் பரமசிவன் தோன்றி அத்ரிமஹாமுனிவருடைய தவத்திற்கும், அவரது பத்னியினுடைய பக்தி, பூஜை, பதிவிரதாதர்மம், இவைகளுக்கும், மிகவும் ஈடுபட்டவராய் அவர்களைப் பார்த்து 'உங்களுக்குவேண்டிய வரத்தைக் கேளுங்கள்' என்றார். அவர்கள் பகவானைநோக்கி "எங்களிடத்து தேவரீருக்குக்கிருபையிருக்கும் பக்ஷத்தில் நீர் லிங்க ரூபமாய் இவ்விடத்திலேயே

எழுந்தருளியிருக்கவேண்டும்" என்று வேண்டினார்கள் சிவபெருமான் அவர்களுடைய பிரார்த்தனைகளுக் கிணங்கி அத்ரீசுவரர்என்ற பெயரால் சகலருக்கும் சுகத்தைக் கொடுத்துக்கொண்டு அங்கிருக்கிறார். இவ்வாறு மூர்த்திவிசேஷமும், தீர்த்தவிசேஷமும் உள்ள அவ்விடத்திலேயே எல்லா முனிவர்களும் வந்து தவம் செய்யலானார்கள். அப்பால் உலகமெல்லாம் மழை பொழிந்து உலகிலுள்ளோர் யாவரும் க்ஷேமத்தையடைந்தார்கள்.

இவ்விதம் சபையோரால் புகழப்பட்ட அத்ரிமஹாமுனிவரின் பெருமையைச் செவியுற்று, ஆனந்தங்கொண்டு வைன்யராஜன் அம்மஹானையே அத்வர்யூ என்றரித்விக்காக நியமித்து, அனேக யாகங்கள் செய்திருந்த போதிலும், விசேஷமாக அச்வமேத யாகங்களால் மஹாவிஷ்ணுவையாராதிக்கலானான். மனுவின் க்ஷேத்திரமான பிரும்மாவர்த்தத்தில் அச்வமேதயாகங்கள் நடைபெற்றன. அந்த யாகங்களில் சதக்ரது எனப்படும் மஹேந்திரனால் ஏற்பட்ட விக்கினங்கள் அடிக்கடி நேர்ந்தாலும், உத்தமர்கள் எடுத்த காரியத்தை நிறைவேற்றாமல் நடுவில் நின்றுவிடமாட்டார்கள் என்றபடி 99 யாகங்களைச் செய்து நூறுவது யாகத்தையும் செய்யத் தீக்ஷைபெற்றான்.

## யாகங்களின் மேன்மை

அந்த யக்ஞங்களில் ஒவ்வொன்றும் மானிடரால் வர்ணித்துக்கூற முடியாத மேன்மை பெற்றது அவைகளிலும் கடைசியான யாகம் யாவராலும் அதிசயிக்கத் தக்க மிக்க மேன்மை வாய்ந்தது. அந்த யாகத்தில் பூமிதேவியானவள் கோரூபந் தரித்துக்கொண்டு, நெய்முதலான யாகசாதனங்களை அளித்தாள். கற்பக விருக்ஷங்கள் தாழ்ந்த கிளைகளினின்று மிக்க மதுரமான பழங்களை வர்ஷித்தும், பழங்களினின்று தேனை நதியாகப் பெருக்கியும், ரஸவர்க்கங்களை உண்டாக்கியும் வானவர்களுக்கும் ஆச்சர்யத்தை உண்டாக்கிற்று. ரத்னாகரங்களும், வஜ்ரம், வைடூர்யம், பவழம், முத்து முதலிய விலைமதிக்கப்பெறாத ரத்தினங்களை வாரி இறைத்தன. ஒஷதிகள் பக்ஷ்யம் போஜ்யம், லேஹ்யம், சோஷ்யம் என்று நான்குவிதமான அன்னங்களை உண்டுபண்ணின. லோகபாலகர்களும், ஆச்சரியமான உபாயனங்களைக்கொண்டு வந்தார்கள். யாகத்தில் கூடின யாவரும், உபநிஷத்தால் அறியக்

கூடிய நாராயணனுடைய பக்தியால் சித்த சுத்தியைப் பெற்றனர். பிருதுமகாராஜன் இவ்விதமான மகிமை வாய்ந்த அச்வமேதங்களை ஸங்கல்பித்தபடி அனேகமாய் நிறைவேற்றினான்.

## விக்னங்கள்.

வைன்யராஜன் நூறுவது யாகத்தைத் தொடங்கும்போது, மஹேந்திரன் பொறாமை கொண்டு முன் நடந்த யக்ஞங்களில் சமயம் வாய்க்காமல், கடைசியான அச்வமேதமானதால், மிகுந்த பரபரப்போடு வேறு ரூபத்தால் தன்னை மறைத்து குதிரையை அபகரித்தான். அப்போது மாயையால் பாஷண்ட உருவங்கொண்டு, குதிரையோடு ஆகாயஞ் செல்லும் தேவராஜனை அத்திரமுனிவர் தபோமஹிமையாலறிந்து, பிருதுமஹாராஜனின் மூத்தகுமாரனை நோக்கி, இந்திரனை வதைக்கும்படி ஏவினார். தீரனான அக்குமாரனும், வேகமாய்ப் பின் தொடர்ந்து இந்திரனை விரட்டும்போது, அவ்விந்திரன் ராஜகுமாரன் முன்னிலையில் ஜடாதாரியாயும், தர்மசரீரமுள்ளவனாயும்,தோன்றினான். அப்போது ராஜகுமாரன் கூர்மையான அம்பை அவனிடத்தில் பிரவேசிக்கச் செய்யவில்லை. வேஷத்தால் தர்மிஷ்டனாய்த் தோன்றுகிறவரிடமும், த்ருவவம்சத்து ராஜாக்கள் கருணை காட்டுவது இயல்பே.

## விஜிதாச்வன் என்ற பட்டம்.

அப்போது ஸர்வக்ஞரான அத்ரி பகவான், ராஜகுமாரனை நோக்கி, சத்ருவுக்கும், வியாதிக்கும் வளரும்படி இடம் கொடுக்கலாகாது. ஆகையால் இந்திரனைக் கொல்லவேண்டும் என்று சொல்லவே, அக்குமாரனும் சினங்கொண்டு, மாயாவியான இந்திரனை விரட்டினான். உடனே குதிரையையும் மாயாவேஷத்தையும் விட்டுவிட்டு இந்திரன் மறையவே, அக்குமாரனுடைய வீரச்செயலைக் கண்டு. முனிவர்கள் அவனுக்கு விஜிதாச்வன் என்று திருநாமமிட்டார்கள்.

## மறுபடியும் விக்னம்.

மறுபடியும் தேவராஜன் கோபமடைந்து பெருமிருளை உண்டாக்கி, அதிலேதான் மறைந்து யூபஸ்தம்பத்தில் ராஜகுமாரனால் கட்டப்பட்டிருந்த குதிரையை அபகரித்தான். அப்போது

மந்திரிகளால் காட்டப்பட்ட கபாலதாரியான அவ்விந்திரனை, ராஜகுமாரன் கண்டு புருவங்களை நெரித்துக்கொண்டு, கூர்மையான அம்பை வில்லில் தொடுக்கவே, முன்போலவே தேவராஜன் அச்வத்தையும் மாயாவேஷத்தையும் விட்டு விட்டு மறைந்தான். அது முதற்கொண்டுதான் அவ்விந்திரனின் மாயாவேஷங்களை அற்ப புத்தியுள்ளவர்கள் கைக்கொண்டார்கள். பாபங்களின் கண்டங்கள் என்று பொருள்வாய்ந்த அவைகளைக் கைப்பற்றியதால் பாஷண்டர்கள் என்றும் வழங்கப்படலானார்கள். பிரதாபசாலியான பிருதுவானவர் அம்மஹேந்திரனின் ஸாஹஸத்தைக்கண்டு, சினந்து வில்லைக்கையிலெடுத்து, பாணத்தைச் சந்தானஞ்செய்யத்தொடங்கினர். அதைக்கண்ட ரித்விக்குகள் யக்ஞத்தில் விதிக்கப்பட்டவதமின்றி வேறு இம்சைத் தம்மால் செய்யத்தக்கதல்ல என்று அவரைத்தடுத்து, மிகுந்த சக்திவாய்ந்த ஆஹுதிகளாலே இந்திரனை அக்னியில் ஹோமஞ்செய்கிறோமென்று பிருதுவின் அனுமதிபெற்று, ஸ்ருக்கு என்ற ஓமபாத்திரத்தால் ஓமம் பண்ணத் தொடங்கினபோது, ஹம்ஸவாஹனரும் ஸ்ரஸ்வதிகாந்தருமான சதுர்முகர் நேராய் ஆவிர்ப்பவித்து அதைத்தடுத்தார்.

## பிரும்மாவின் உபதேசம்.

ஓ! பிராம்மணர்களே, கேளுங்கள்? இந்த தேவராஜனை உங்களால் கொல்வதற்கு முடியாது. யக்ஞம் என்பது பகவானுடைய ஸ்வரூபம். பகவானுடைய அம்சபூதர்களான தேவர்களும் யக்ஞத்தாலேயே ஆராதிக்கப்படுகிறார்கள். ஆகையால் யக்ஞ சரீரியான இந்திரனுடைய நட்பு உங்களுக்கு வேண்டும். இல்லாவிடில் முன்போலவே மாயாவேஷத்தைச் சிருஷ்டிப்பான். ஓய் ஆதிராஜனே' நீர் 99 யக்ஞங்கள் இடையூறின்றி நிறைவேற்றினீர் அவைகளே போதுமானவை. நீர் ஆசையற்று மோக்ஷதர்மமறிந்திருப்பதால். யாகம்செய்து முடித்தே தீரவேண்டும்என்ற அவசியமில்லை. இந்திரனிடத்தில் ஆக்ரஹத்தை விட்டு விட்டு, சிநேகத்தையே கொள்ள வேண்டும். நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் மேன்மை பொருந்தின குணங்களால் சமானர்களே "தேவதைகளின் ரஹஸ்யத்தையறிய யாரால்தான் முடியும்" ஸத்புருஷர்கள் அதிர்ஷ்டம் பலமுள்ளது என்று நினைத்து, சோகத்திற்காளாக மாட்டார்கள். வேனராஜனால் கெடுக்கப்பட்ட நன்மார்க்கங்களை

நிலைநாட்டுவதற்கல்லவோ உமது அவதாரம் பாஷண்டமதத்தை ஜனங்கள் கைக்கொள்ளாது தடுத்து லோகத்தை ரக்ஷிப்பதுஉமது கடமை என்று உபதேசித்து தேவராஜனோடு சிநேகபாவத்தை உண்டாக்கினார். உடனே பிருதுராஜனும். பிரும்மாவையும், புரந்தரனையும் வணக்கத்துடன் அர்ச்சித்து ஆனந்த பாஷ்பம் பெருக விட்டு, சதுர்முகனைத் துதித்தான்.

## பிராம்மணாசீர்வாதம்.

ரித்விக்குகளும், பிருதுராஜனால் யாகத்தில் ஸமர்ப்பிக்கப் பட்ட ஸம்பூர்ண தக்ஷிணையை அடைந்து, சந்தோஷித்து, மஹாராஜனுக்கு இஷ்டங்கள் சித்திக்குமாறு, அனுக்கிரஹஞ் செய்தார்கள், ஆதிராஜனே, உம்மால் மரியாதையுடன் சம்மானிக்கபட்ட நாங்கள் சந்தோஷமடைந்தோம். சிலாக்கியமான பெருமையைப் பெற்றீர். கமலாஸனருடைய அனுக்கிரஹம் பூர்ணமாய்.உமக்குக்கிடைத்தது. உமது புத்திரனால் இந்திரனோடு பேர்புரிந்து குதிரை மீட்கப்பட்டது. அதனால் விஜிதாச்வன் என்ற பட்டமும் அடையப்பட்டது தேவராஜனும் தங்களுக்கு மித்திரானார். புனர் ஜன்மாவைத்தடுக்கக்கூடிய நைராச்யத்தைக் கடைபிடித்து, பகவத் பிரசாதத்தைப்பெற்று விளங்கும் உமது நல்லொழுக்கத்தைக்கண்டு வியப்படைகிறோம். ஆசீர்வாதம் பண்ணும் இயல்புடைய எங்களால் உலக நன்மையைக் கருதி நீர் தீர்க்காயுஸ் உள்ளவராயிருக்கக்கடவீர் என்று ஆசி கூறப்படுகிறது.

மூன்றாவது பாகம் முற்றிற்று.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி,

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---